பட்ட பிரச்சினைக்கு மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் விரிவாகப் பதில் சொன்னதற்குப் பிறகு அந்த நாடு கடத்தப்பட்டார்கள் என்பதற்குரிய ஆணை அன்றைய கவர்னரால் இடப்பட்டது என்ற அடிப்படையில் நான் தெரிவித்தேன் என்பதற்கு நீண்ட விளக்கம் அவரும் தெரிவித்து திரு. குமரி அனந்தன் அவர்களும் விரிவாக அதில் பேசியதற்குப் பின்னால் இதில் எவ்வித அவை உரிமை மீறலும் இல்லை என்று தீர்ப்பு வழங்குகின்றேன். (குறுக்கீடுகள்) அவர்தான் உத்தரவு இருந்தது ; அந்த உத்திரவைச் சொன்னேன் என்கிறார். (குறுக்கீடுகள்) வேண்டாம்.

3. ஒத்திவைப்புத் தீர்மானம்

23-4-1993 அன்று சிதம்பரனார் மாவட்டம், ஏரலில் ஒரு விசாரணைக் கைதி மரணம் அடைந்ததையொட்டி பொது மக்களிடையே ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒத்திவைப்புத் தீர்மானம். மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. எஸ். டேனியல்ராஜ், திரு. எஸ். எஸ். ராமசுப்பு, திரு. மா. சுந்தரதாஸ், திரு. ஆர். சிங்காரம் ஆகியோர் சிதம்பரனார் மாவட்டம் ஏரலில் விசாரணை கைதி சாவினால் போலீஸ் ஸ்டேஷன் முற்றுகை. அதனால் அந்தப் பகுதியில் பொதுமக்கள் பீதி என்னும் பொருள் குறித்து விவாதிக்க பேரவையின் இன்றைய இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டும் என்று கோரி அதற்கான அறிவிப்பைக் கொடுத்துள்ளார்கள். இது அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்கும் அளவுக்கு எவ்வாறு அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை மிகச் சுருக்கமாக விளக்கக் கோருகிறேன். திரு. எஸ். டேனியல்ராஜ். (குறுக்கீடு) தயவு செய்து உட்காருங்கள். உங்களுக்கு நான் எழுத்து மூலமாக என்னுடைய அனுமதியை மறுத்திருக்கிறேன். அப்படி மறுக்கப்பட்ட பிரச்சினையை இங்கே வந்து எந்த வகையிலேயும் எழுப்பக் கூடாது என்று இருக்கிறது. உட்காருங்கள். திரு. டேனியல்ராஜ். (குறுக்கீடு) நான் உங்களுக்கு அனுமதி மறுத்திருக்கிறேன். உட்காருங்கள். அனுமதி மறுத்ததற்குப் பிறகு நின்றுகொண்டு பேசிக்கொண்டிருக்கக் கூடாது. உட்காருங்கள். திரு. டேனியல்ராஜ் பேசட்டும். முக்கியமான பிரச்சினை.

திரு. எஸ். டேனியல்ராஜ் : பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரனார் மாவட்டம் ஏரல் அருணாசலசாமி கோயிலில் 20-4-93 அன்று நடைபெற்ற நகைப் பறிப்பு வழக்கு சம்பந்தமாக ஏரல் நகரத்திற்கு அருகாமையில் உள்ள குருவாட்டியூர் என்ற கிராமத்தைச் சார்ந்த, சேகர், ஜோசப், தினகரன் ஆகிய மூவரையும் ஏரல் காவல் நிலையத்திற்கு 21-4-1993 அன்று விசாரணைக்கா

அழைத்து வந்தார்கள். அந்த மூவரில் சேகர் என்பவரை ஏரல் காவல் நிலையத்தைச் சார்ந்த காவல் துறையினர் மிருகத்தனமாக தாக்கி அதன் காரணமாக ஏரல் காவல் நிலையத்திலே, லாக்கப்பிலே அவர் இறந்து போனார். அதன் காரணமாக ஏரல்—நகரத்திலேயும் ஏரலைச் சுற்றிலும் உள்ள கிராமத்திலேயும் மிகவும் பதட்டமான ஒரு சூழ்நிலை ஏற்பட்டு இதன் காரணமாக—ஏரல் நகரத்தை பொறுத்தமட்டில் சிதம்பரனார் மாவட்டத்தில் தூத்துக்குடி, கோயில்பட்டி, அதற்கடுத்தபடியாக ஏரல் நகரமானது மிகப் பெரிய வியாபார ஸ்தலமாக இருக்கின்ற காரணத்தினால் அந்த நகரத்தைச் சார்ந்த வியாபாரிகள் இந்தப் பதட்டத்தின் காரணமாக அவர்களுக்குப் பாதுகாப்பு இல்லை என்ற சூழ்நிலையை உருவாக்கியதன் காரணமாக, ஏரல் நகரத்திலே கடைகள் எல்லாம் மூடப்பட்டு வருகின்றன. அதோடு மாத்திரமல்லாமல் இந்த மூவரைப் பொறுத்தமட்டிலே இதுவரையிலே எந்த வழக்குகளிலேயும் அவர்கள் ஈடுபடவில்லை. இதன் காரணமாக அந்தப் பகுதியிலே இருக்கின்ற பொது மக்கள் மத்தியிலே இனிமேல் விசாரணைக்காக ஏரல் காவல் நிலையத்திற்கு அழைக்கப்பட்டால் உயிரோடு திரும்பி வருவோமா என்ற அச்சம் நிலவி வருகிறது. ஏனென்றால் கடந்த 3 ஆண்டுகளுக்குள் இரண்டு முறை இதே ஏரல் காவல்நிலையத்திலே விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டவர்கள் இரண்டு பேர்கள் இதுவரையிலே லாக்கப்பிலே இறந்திருக்கிறார்கள். ஆகவே, இந்த நடவடிக்கைகளைப் பொறுத்தமட்டிலே இந்தச் சம்பவத்தைப் பொறுத்தமட்டிலே அந்தப் பகுதியைச் சார்ந்தவர்கள் இது முழுக்க முழுக்க திட்டமிட்டு காவல்துறையினரால் நடத்தப்பட்ட சதி என்று தான் இன்றைய தினத்திலே கருதிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இந்தச் சம்பவத்தைப் பொறுத்தமட்டிலே முழுக்க முழுக்க காவல் துறை இதற்கு பொறுப்பு ஏற்க வேண்டும். அதோடு மட்டுமல்லாமல், ஒரு முழு நீதி விசாரணையை இந்தச் சம்பவத்தின் தொடர்பாக இந்த அரசு அமைக்க வேண்டும் என்பதை இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். இந்த லாக்கப்பில் இறந்து போன சேகரைப் பொறுத்த வரையில் மிகவும் கஷ்டமான குடும்பத்தைச் சேர்ந்தவர், ஏழை விவசாயி, தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர். ஆகவே இவருடைய குடும்பத்திற்கு முதலமைச்சருடைய நிவாரண நிதியிலிருந்து நிதி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-35

ஸ்ரீவைகுண்டத்தில் இருக்கின்ற துணை கண்காணிப்பாளரும், ஏரல் காவல் நிலைய ஆய்வாளர் ஆகிய இருவரும் கடந்த பல மாதங்களாக விடுப்பில் சென்றிருக்கிற காரணத்தால் புதிதாக யாரையும் நியமிக்காமல் இருப்பதன் காரணமாக இந்தச் சம்பவம்

நடந்து இருக்கலாமோ என்ற ஒரு நிலை ஏற்பட்ட தன் காரணமாக உடனடியாக ஸ்ரீவைகுண்டம் துணை கண்காணிப்பாளரையும், ஏரல் காவல் நிலையத்திற்கு ஆய்வாளரையும் நியமிக்கவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த சம்பவத்தைப் பொறுத்தவரையில் மிக முக்கியமான சம்பவமாக இருக்கிற காரணத்தால் இதை இந்த அவையில் முழுமையாக விவாதிக்க வேண்டும் என்றும், இதற்காக சபையினுடைய இதர அலுவல்களை ஒத்திவைத்து இதை விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1-4-1993 அன்று சிதம்பரனார் மாவட்டம் ஏரலில் உள்ள சேர்மன் கோவில் அருகில் மதுரையைச் சேர்ந்த செல்வராணி என்பவரிடமிருந்து 12 சவரன் எடையுள்ள தங்க நகைகளை சில அடையாளம் தெரியாத விஷமிகள் திருடியது தொடர்பாக கொடுத்த புகாரின் பேரில் ஏரல் காவல் நிலைய குற்ற எண். 192/93-ல் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இந்த வழக்கு தொடர்பாக 21-4-1993 அன்று கருக்காட்டூர் கிராமத்தைச் சேர்ந்த சேகர், தினகரன், மற்றும் ஜோசப் என்ற மூவரை காவல் துறையினர் சந்தேகத்தின் பேரில் ஏரல் காவல் நிலையத்திற்கு விசாரணைக்காக அழைத்து வந்தனர். 23-4-1993 அன்று கருக்காட்டூரைச் சேர்ந்த சேகர் காவல் நிலையத்தில் போலீஸ் பாதுகாப்பில் இருந்தபோது மரணம் அடைந்தார். ஏரல் மற்றும் அதைச் சுற்றியுள்ள கிராமங்களைச் சேர்ந்த பொது மக்கள் ஏரல் காவல் நிலையம் முன்பாக திரண்டு சேகர் மரணத்திற்குப் பொறுப்பான காவல் துறையினர் மீது நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமெனக் கோரினர். மேலும், அவர்கள் காவல் துறையினர் அடித்ததால்தான் சேகர் இறந்து போனதாகக் கூறினர். இது தொடர்பாக ஏரல் காவல் நிலைய குற்ற எண். 195/93-ல் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டது. உடனடியாக விசாரணை மேற்கொள்ள தூத்துக்குடி உதவி கலெக்டருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. தூத்துக்குடி உதவி கலெக்டர் உடனடியாக ஸ்ரீவைகுண்டம் அரசு மருத்துவமனை பிரேதக் கிடங்கில் பிரேத விசாரணை நடத்தினார். பிரேதப் பரிசோதனைக்குப் பின்னர் பிரேதம் அவரது உறவினர்களால் கருக்காட்டூரில் தகனம் செய்யப்பட்டது. மேலும் இந்த சம்பவம் குறித்து காவல் துறை நிலை ஆணை எண். 145-ன் கீழ், அதாவது, போலீஸ் ஸ்டாண்டிங் ஆர்டர் 145-ன் கீழ் விசாரணை மேற்கொள்ள தூத்துக்குடி உதவி கலெக்டருக்கு உத்தரவிடப்

பட்டுள்ளது. உதவி கலெக்டரின் அறிக்கைக் கிடைக்கப்பெற்ற பின்பு தக்க மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த சம்பவம் தொடர்பாக ஏரல் காவல் நிலையத்தைச் சேர்ந்த உதவி ஆய்வாளர் திரு. பி. ராஜேந்திரன், தலைமைக் காவலர் திரு. தங்கபாண்டியன்,முதல் நிலைக் காவலர் திரு. எஸ். வேல்சாமி, இரண்டாம் நிலைக் காவலர் திரு. சேகர், காவலர்கள் திரு. ஆர். அந்தோனி, திரு. அடைக்கல ஜேக்கப், திரு. எம். ஜப்பார் செல்வன், திரு. எம். செல்லையா ஆகியோர் 23-4-1993 தேதி முதல் தற்காலிக பணி நீக்கம் செய்யப் பட்டுள்ளனர். 23-4-1993 அன்று மாலை ஏரலில் உள்ள கடைகளைக் கடைக்காரர்கள் மூடி வைத்து இருந்தனர். பிரச்சினைகள் எழக்கூடும் என்று எதிர்பார்த்து முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக 23-4-1993 அன்று திருச்செந்தூர்-திருநெல் வேலிக்கு இடையே பேருந்துகள் ஓட அனுமதிக்கப்படவில்லை. சட்டம் ஒழுங்கைப்பராமரிக்க முக்கியமான பகுதிகளில் போலீஸ் பாதுகாப்புப் போடப்பட்டு நிலைமைக் கண்காணிக்கப்பட்டு வருகிறது. தற்போது அங்கே அமைதி நிலவுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே, இந்த விளக்கத்திற்குப் பிறகு அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்குப் பிறகு பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இந்தப் பிரச்சினையைப் பற்றி விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று கருதி இந்தப் பிரச்சினையை இத்தோடு முடித்து வைக்கிறேன்.

பிற்பகல் 12.40

4. கவன ஈர்ப்பு.

(அ) கரூர் வட்டம், நொய்யல் நீர்ப்பிடிப்புப் பகுதியில் சட்ட விரோதமாகக் கிணறுகள் தோண்டுவதால் ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. ம. சின்னசாமி அவர்கள், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார் திரு. ம. சின்னசாமி.

திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''கரூர் வட்டம், நொய்யல் நீர்ப்பிடிப்புப் பகுதியில் சட்ட விரோதமாகக் கிணறுகள் தோண்டுவது குறித்த'' அவசரப்